Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

# ஐம்பூதங்களும் மனிதஉடல் அமைப்பும்

**முனைவர் ந.ஜெயசுதா,**
தமிழ் உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

இவ்வுலகம் நிலம் நீர் காற்று ஆகாயம் நெருப்பு என்ற ஐம்பூதங்களால் உருவானவை. இறைவன் நமக்குக்கொடுத்த மிகப் பெரிய பொக்கிசம் இப்பூதங்களாகும். ஐம்பூதங்களால் தான் இவ்வுலகம் இயற்கை வளங்களைக் கொண்டுள்ளது. மனிதன் இந்த இயற்கையைச் சூழ்ந்தே படைக்கப்பட்டுள்ளான் என்பதை அனைவரும் உணர வேண்டும். ஒவ்வொரு மனித உடலமைப்பும் பஞ்சபூதத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாகியுள்ளது. ஐந்தில் ஒன்று இல்லையென்றாலும் இவ்வுலகமும் இல்லை, இவ்வுடலுமில்லை. இந்த உண்மையை உலகநாடுகளில் உள்ள அனைவருக்கும் உணர்த்த வேண்டிய கட்டாயத்தில் இன்று உள்ளோம். ‘கொரோணா’ என்ற வைரஸ் உலகத்தையே உலுக்கியது. இது போன்று எத்தனையோ வைரஸ்கள் இன்னும் நம்மிடையே உலாவிக்கொண்டே தான் இருக்கின்றது. அதற்கு காரணம் ஐம்பூதத்தை நாம் உணராமல் அதனை மாசுபடுத்தி அதன் அழிவில் நாம் நம் அழிவை நாமே ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஐம்பூதத்தோடு பற்றுதலும் புரிதலும் இல்லாதவரே பெரும்பாலும் உடல் உபாதைகளுக்கு உட்படுகின்றனர் எனலாம்.

ஐம்பூதங்கள் என்பது உலகளாவிய நிலையில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை. இவையால் வரும் நன்மை தீமை குறித்த பதிவுகளும் ஏற்புடையவையே. ஐம்பூதத்தோடு உருக்கொண்ட இவ்வுலகில் மனித உடல் அமைப்பு ஐம்பூதத்தோடு ஒன்றிய தன்மையை சித்தர்கள் வழிக் கொண்டு இக்கட்டுரை ஆய்வுநோக்குடன் அமையவுள்ளது.

பஞ்சபூதங்களால் இவ்வுலகம்:






நாம் வாழும் இவ்வுலகம் நிலம், நீர், காற்றுஇ வான்இ தீ ஆகிய ஐம்பூதங்களால் ஆனது. இவையில்லாது இவ்வுலகில் எந்த உயிரனமும் வாழ முடியாது என்பதை அனைவரும் அறிவோம். இவ்வுலகம் ஐம்பூதங்களால் உருவானது என்பதற்கு தொண்மை நூலான தொல்காப்பியம் சான்றுபகர்கிறது.

> “ நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம்” (தொல்காப்பியம்.பொருளதிகாரம் மரபியல்.635)

இதற்கு இலக்கணத்தோடு பல இலக்கியச்சான்றுகளும் உண்டு.

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

சங்க இலக்கிய நூலான புறநானூற்றில்,

"மண் திணிந்த நிலனும்
நிலம் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை"( புறநானூறு.2அடி.1-6)

என்ற பாடல் அடிகள் ஐம்பூத இயற்கையை உணர்த்துகிறது.

திருமூலர் திருமந்திரத்தில்,

"மானின் கண் வானாகி வாயு வளர்ந்திடும்
கானின் கண் நீரில் கலந்து கடினமாய்
தேனின் கண் ஐந்தும் செரிந்தைந்து பூதமாய்
பூவின்கண் நின்று பொருந்தும்புவனமே"(இரண்டாம் தந்திரம்.9.படைப்பு)

என்ற பாடலில் இறைவனிடமிருந்து வானம் தோன்றியது, வானத்திலிருந்து காற்று தோன்றியது, காற்று வளரத் தீயில் இருந்து நீர் தோன்றியது பிறகு கடினத் தன்மைகொண்ட நிலம் தோன்றியது என்று விளக்குகிறார். இவ்வுலகம் ஐம்பூதங்களால் ஆனது என்பதற்கு மேலும் பரிபாடலில்,

"கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் அவையிற்
மீண்டும் பீடுயர் பீண்டி அவற்றிற்கும்
உள்ளீடாகிய இரு நிலத்து ஊழியும்" (பரிபாடல்2, 5-12)

என்ற பத்துப்பாட்டு நூலிலிருந்து, வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றியமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நெருப்புக் கோளமாக இருந்த பூமி, குளிர்ந்தது பணி படலத்தால் சூழப்பட்ட நிலைமாறி நிலம் தோன்றியது என்பதும் அவை நிகழ பல ஆண்டுகள் ஆயின என்பதையும் அறிகிறோம். இக்கருத்துக்களின் வழி ஐம்பூதங்களால் உருவானது இவ்வுலகம் என்பதை இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. மேலும் இணையத்தின் வழி,

ஐம்பூதங்கள் எவ்வாறு உருவாகியது என்பதற்கு, பஞ்ச பூதங்களில் 100 சதவிகிதத்தில் 10 சதவீதம் கண்ணுக்கு தெரிந்தும், மீதம் 90 சதவீதம் கண்ணுக்குத் தெரியாமலும் அமைந்துள்ளதாம். கண்ணுக்குத்தெரியாத பகுதியிலிருந்து தான் ஐம் பூதங்கள் உருவாகியது என்று ஆன்மீகம் சொல்வதாக கூறுகின்றர் சுப்பையாதாஸ் கணிதப்பேராசிரியர். இதற்கு பெயர் பஞ்சீகரணம் என்றும் இதை கபிலர் கூறுகின்றார் ((https://youtu.be/JZRE5kyJ_bQ) என்பதன் வழியும் இத்தோற்றம் குறித்த கருத்துக்களை அறியமுடிகின்றது.

இத்தகைய கருத்துக்களெல்லாம் நாம் வாழ்கின்ற பூமி நாம் வாழ்வதற்குத் தகுந்த சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது. எதனால் என்றால்? ஐம்பூதங்களால் தான்

இச்சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்த ஐம்பூதங்ளும் இயற்கையின் வடிவமாகவும் தெய்வமாகவும் போற்றுகிறோம். இதை உணர்ந்த மக்கள் அன்றே இயற்கை வழிபாட்டில் இவைகளுக்கு பயந்து, நம் பாதுகாப்பு நோக்குடன் முன்வைத்து வழிபட்டும் வந்தனர். வருகின்றனர்.

மனித உடல்அமைப்பு:




ஐம்பூதங்களான நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகியவற்றால் இவ்வுலகம் எவ்வாறு உருவானதோ? அவ்வாறே மனித உடலும் ஐம்பூதங்களால் உருவாகியுள்ளது என்பதற்கு பல சான்றுகள் காட்டுகின்றனர் அறிஞர்கள். அதுமட்டுமல்ல நம் அன்றாட வாழ்க்கையே சான்றாகின்றது. ஓர் உயிர் ஆகாயம் கொண்ட பிரபஞ்சத்தில் பிறந்தவுடன் காற்றைக்கொண்டு சுவாசித்து அழுகையை வெளிப்படுத்துகிறது. நிலமான உடம்புக்கு நீராகாரமான பாலைக் கொடுக்கின்றோம் அதை சீரணிக்க உடம்பு வெப்பநிலையை சரிசெய்கிறது. இதன் பின் நிகழ்பவை அனைத்திற்கும் ஐம்பூதமே துணைநிற்கின்றது. இதை நாம் யாவரும் உணரவில்லைஇ இப்புரிதலை உணர்த்தவில்லை எனலாம்.

மனித உடல் மட்டுமன்று ஓர் அறிவு முதற்கொண்டு எல்லா உயிரினங்களும் ஐம்பூதத்தால் உருவானவையே. ஊடலில் தோன்றும் நோய்களுக்குக் காரணமாக அமைவதும், அந்நோய்களைத் தீர்க்கும் மருந்துப் பொருள்களும் ஐம்பூதச்சேர்க்கையால் உருவாகின்றன. பஞ்சபூதங்கள் மனித உடலோடு ஒன்றியுள்ளதற்கு சித்தர் பாடலான,

“அண்டத்தில் உள்ளதே பிண்டம்
பிண்டத்தில் உள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே” (திருமந்திரம்)

அண்டம் என்பது “பிரபஞ்சம்” பிரபஞ்சத்தில் உள்ளது அனைத்தும் பிண்டத்தில் உள்ளது என்கிறார். பிண்டம் என்பது உடம்பை குறிக்கிறது. ஆக பிரபஞ்சத்தில் உள்ள ஐம்பூதங்களும் பிண்டமாகிய உடம்பில் அமைந்துள்ளது என்பதை பதிவு செய்துள்ளார் சித்தர்.

மனித உடல் உருவாகிய விதம் குறித்து சத்குரு, “அடிப்படையில் இந்த உடல் என்பது பஞ்சபூதங்களான நிலம், நீர், காற்று, நெருப்பு மற்றும் ஆகாயத்தால் ஆனது. பஞ்சபூதங்களால் ஆட்டுவிக்கப்படும் பொம்மை என்று நம் நாட்டில் இந்த உடலைக் குறித்து வழங்குவதுண்டு. உடலின் கூட்டமைப்பு என்று பார்த்தால்,

அதில் 72% நீரும், 12% நிலமும், 6% காற்றும்,4% நெருப்பும், மதீ 6% ஆகாயமும் கலந்து இவ்வுடல் உருவாகி இருக்கிறது" (இணையதளம். தினமலர் ஜீன் 16..2016) என்றும்இ

மேலும், இக்கருத்திற்கு வலுசேர்க்கும் வகையில்இ ராஜு அவர்கள் "மனித உடல் என்பது பஞ்சபூதங்களின் சேர்க்கை, அவற்றின் இணைப்பினால் உடல் தோன்றுகிறது. இறுதியில் பூதங்களுடன் கலந்து ஒன்றி விடுகிறது"(ஹோமியோபதி மருத்துவம்ப.7) என்று மருத்துவ அறிஞரின் கருத்து மூலமும் பிரபஞ்சத்தில் உள்ள ஐம்பூதத்தால் மனித உடலும் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை உணரமுடிகின்றது.

மனித உடலும் பஞ்சபூதமும்:

| **பஞ்சபூதங்கள்** | **மனித உறுப்புகள்** |
|---|---|
| நிலம் | மண்ணீரல், வயிறு |
| காற்று | நுரையீரல்,பெருங்குடல் |
| நீர் | சிறுநீரகம், சிறுநீர்ப்பை |
| ஆகாயம்(மரம்) | கல்லீரல், பித்தப்பை |
| நெருப்பு | இதயம், சிறுகுடல் |

ஐம்பூதங்களோடு மனித உடல் உறுப்புக்கள் ஒன்றி வருவதை இந்தஅட்டவணையின் மூலம் அறியலாம்.

ஒவ்வொரு பஞ்சபூதங்களும் நமது உடலின் உறுப்புக்களோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது. பஞ்சபூதங்கள் ஒவ்வொரு உருப்புகளுக்கும் தன்னுடைய சக்தியைக் கொடுத்து ஆற்றல் மிக்க உறுப்புகளாக மாற்றம் பெருகின்றன. உதாரணமாக,

நிலத்தில் நாம் எந்த ஒரு பொருளை விதைத்தாலும் அது வேறொன்றாக அல்லது வேறு ஆற்றலாக மாறுகின்றது. நிலம் அப்பொருளைத் தன் வயமாக்கி வேறறொன்றாகத் தருதல். இச்செயலையே மண்ணீரலும் வயிரும் செய்கிறது. எவ்வாறு என்றால்? நாம் உண்ணும் பல்வேறு வகைப்பட்ட உணவுகளையும் எடுத்துக்கொண்டு ஒரு மனித உடலாக உருவாக்கும் செயலை செய்வது.

காற்று இந்த பிரபஞ்சம் முழுவதும் பரவியிருப்பது. தன் ஆற்றலை உலகம் முழுவதும் பரவச்செய்கிறது. ஒரு குழந்தை பிறந்ததும் பிரபஞ்சத்தில் முதலில் எடுத்துக் கொள்வது காற்று. காற்றால் இயல்பாகவே நுரையீரல் இயங்குகிறது. பெருங்குடலுக்கும் இக்காற்று சென்று மலம் வெளியே செல்ல உதவுகிறது.

நீர் உலகில் உள்ள அசுத்தங்களை எல்லாம் நீக்கி தூய்மையாக வைப்பது போலஇ நம் உடலில் உள்ள அசுத்தங்களை நீரைக்கொண்டு சிறுநீரகமும் சிறுநீர்ப்பையும் வெளியேற்றுகிறது. ஆகாயம்(மரம்) நச்சுக்காற்றை சுவாசித்து நல்ல காற்றை மரம் நமக்குத் தரும் அதுபோல, கல்லீரலும், பித்தபையும் நச்சுகளை வெளியேற்றி உடலை சுத்தப்படுத்துகிறது.

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

நெருப்பு தன் ஆற்றல் மூலம் எல்லாப் பொருள்களையும் தனதாக்கிக் கொண்டு சிதைவடையச் செய்கிறது. இந்த நெருப்பு இருதயத்தில் தன் ஆற்றலின் மூலம் பரவச்செய்து சிறுகுடலில் உள்ள உணவுப் பொருட்களை வெப்பத்தின் மூலம் சிதைக்க செய்து ஜீரனப்படுத்தும். இத்தகைய செயல்பாடுகள் உடலில் நாள்தோறும் நடைபெறுவதற்கு ஐம்பூதமே முதற்காரணமாக விளங்குகின்றது என்பதை நாம் உணரவேண்டும். மேலும் இரத்தின வேலார்,

"கால் மண் தலைவிண்ணாம் நீருடல் வாயுவுயிர்

கோலத்தீ ஞானச் சுடர்" (சித்த மருத்துவக்குறள் ப.11)

என்ற வரிகள் பஞ்சபூதத்தின் பகுதிகளான உடலில் கால் மண் தன்மையும், தலை விண் தன்மையும், நீர் உடல் தன்மையும், காற்று உயிர் தன்மையும். அறிவு தீத் தன்மையும் பெற்று விளங்குகின்றன என்று கூறுகின்றார்

ஆக நமது உடலில் எந்தவொரு செயலுக்கும் அண்டமே துணைநிற்கிறது. அவையின்றி நாம் இல்லை. இதற்கான விளக்கங்கள் சொல்லிக் கொண்டே செல்லலாம் இதனூடேதான் வாழ்வியலைப் பிணைத்துள்ளோம். வாழ்வியலோடு ஒப்பிட்டு நோக்கினால் மிகப்பெரிய ஆய்வுப்பரப்பை உருவாக்கமுடியும் என்ற கருத்தையும் பதிவுசெய்கிறேன்.

பஞ்சபூத ஆலய வழிபாடு:

பஞ்ச பூதங்களால் இவ்வுலகை உருவாக்கவும், காக்கவும், அழிக்கவும் முடியும். அத்தகைய ஆற்றலும் வல்லமையும் உடையது. எல்லா உயிரினங்களும் உயிர் வாழ இன்றியமையாததாக விளங்குகிறது என்பதை நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அதனால் தான் ஐம்பூங்களுக்கும் ஆலயம் அமைத்து வழிபாடு செய்துள்ளனர்.

திருமூலர் கற்களால் கட்டிய ஆலயத்தையும் தாண்டி நம் உடம்பே ஆலயம் என்கிறார். இதற்கு பழமையான படங்கள் நமக்கு இணையத்தின் வழி கிடைத்துள்ளது.







"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காணா மணி விளக்கே"( திருமந்திரம்)

இந்த உடலே ஒரு கோயில் என்றும் இதனுள் உறையும் ஆத்மாவே இறைவன் என்றும் கூறுகிறார். இதற்கு மூலமான சிவபெருமானை பஞ்சதத்துவங்கள் கொண்டு பஞ்சபூதத்தலங்களாக வழிபாடு செய்து வந்துள்ளனர், செய்தும்

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

வருகிறோம். ஆவை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, காளகஹஸ்தி, சிதம்பரம், திருவாணைக்காவல் ஆகியவை பஞ்சபூதத்தலங்களாகும்.

நிலம் - காஞ்சிபுரம்



நீர் - திருவானைக்காவல்



காற்று- காளஹஸ்தி



நெருப்பு – திருவண்ணாமலை



ஆகாயம்- சிதம்பரம்



இந்த பஞ்சபூதங்களின் கோயில்களும் ஒரே நேர் கோட்டில் எந்தவித அறிவியல் உபகரணங்கள் இல்லாமல் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம்முன்னோர்கள் அமைத்துள்ளனர் என்ற அறிஞர்களின் கருத்து மிகவும் சிறப்பக்குறியது ஆய்வுக்கும் உட்படுத்தவேண்டியதில் ஒன்று.

இந்த பஞ்சபூதத்தலங்களை வழிபட்டால் பஞ்ச பூதங்களால் ஆன நமது உடல் தூய்மை அடையும் எனறும்இ இறைவனை மனித மனத்துள் காணவும் முடியும் எனறும் குறிப்பிடுகிறார்கள்.

“உடம்பார் அழியன் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும்மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”(திருமந்திரம் பாடல் 724)

உடம்பை நன்முறையில் கவணித்தால் தான் உயிர் உடம்பில் இருக்கும்.

சில கருத்துக்களை நாம் உணர்வுப்பூர்வமாக நம்புதல்வேண்டும். எவ்வாறு? உலகம் உருவானது ? உடல் உருவானது? என்பதற்கெல்லாம் அறிவியல் பூர்வமான கருத்துக்கள் ஆய்வுலகில் உண்டு. அதற்கு மீறிய உண்மைகளைக் கண்டவர் எவருமிலர். ‘கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டில’ என்ற வாசகம்இ பேருண்மைகளைப்பார்த்தவர் சொல்லவில்லை, சொன்னவர்களைப் பார்க்கவில்லை என்ற வாசகமே உண்மை எனலாம்.

“தூங்கையில் உள் வாங்குகிற மூச்சு
சுழி மாறிப்போனா போச்சு”

என்ற பழமொழி ஐம்பூதத்தில் ஒன்றான காற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது. இது மட்டுமல்ல எல்லாபூதங்களுமே முக்கியமானவையாகும். ஐம்பூதத்தோடு தான் நாம் இயைந்து வாழ்கிறோம் என்பதனை நினைவில் கொண்டு பூதவுடலான இவ்வுடலை பேணிப்பாதுகாப்போம்.

பார்வை நூல்கள்:

1.திருமுலர்- திருமந்திரம்
2.தமிழ்வாணன் - இயற்கை வைத்தியம்
3.ஊரன் அடிகள் - இராமலிங்க அடிகள் வரலாறு
4.இரத்தின வேலார். சி –சித்த மருத்துவக்குறள்
5. தொல்காப்பியம்.
6. இணையம்.

Acknowledgement: Author would like to thank the Management of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi for financial assistance through SEED money support.

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.